செ.வெ.எண்: 07 நாள்: 04.01.2017

# பத்திரிகைச் செய்தி

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர், சென்னை - 6 அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "**Village Health Nurse**" பணிக்காலியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பதிவுதாரர்கள் மாநில அளவிலான உத்தேச பதிவுமூப்புபடி வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட உள்ளனர்.

**கல்வித் தகுதி:** மேற்படி **Village Health Nurse** பணிக்காலியிடத்திற்கு **ANM** கல்வித்தகுதியினை அரசு பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது அரசு உதவிபெறும் பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங்களிலோ பயின்று தேர்ச்சிபெற்று பதிவுசெய்த பதிவுதாரர்கள் மட்டுமே தகுதியானவர்களாக கருதப்படுவார்கள். இப்பணிக்காலியிடத்திற்கு 15-11-2012 **முன்னர் Auxillary Nurse Midwife/ Multipurpose Health Workers கல்வித்தகுதி முடித்தவர்கள் 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் 18 மாத கால சான்றிதழ் தேர்ச்சி பெற்ற பதிவுதாரர்களும், 15-11-2012 பின்னர் முடித்தவர்கள் 12ம் வகுப்பு தேர்ச்சியுடன் இரண்டு வருட சான்றிதழ் தேர்ச்சி பெற்ற பதிவுதாரர்களும் பரிந்துரைக்கப்பட உள்ளனர்.**

மேலும், இக்கல்வித்தகுதியினை **தமிழ்நாடு செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப்பணிக்கான கவுன்சிலில் பதிவு செய்த பதிவுதாரர்கள் மட்டுமே** பரிந்துரைக்கப்பட உள்ளனர்.

**வயது வரம்பு:** 01.07.2016 ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட அருந்ததியின வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் முஸ்லீம் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு உச்ச வயது வரம்பு இல்லை, முற்பட்ட வகுப்பினர் 40 வயதிற்கு மிகாதிருக்க வேண்டும்.

**உத்தேச பதிவுமூப்பு:** 02.01.2017 தேதி முடிய பதிவுசெய்துள்ள அனைத்து வகுப்பைச்சார்ந்த முன்னுரிமையுள்ள மற்றும் முன்னுரிமையற்ற பிரிவைச்சார்ந்த **பெண் பதிவுதாரர்கள் மட்டுமே** உத்தேச பதிவுமூப்பிற்கு கருதப்படுவார்கள்.

மேலே குறிப்பிட்ட பணிக்காலியிடங்களுக்கான கல்வித் தகுதியும், வயது வரம்பும், உத்தேச பதிவு மூப்பும் உள்ள பதிவுதாரர்கள் தங்களது அனைத்து அசல் கல்விச் சான்றுகள், சாதிச்சான்று மற்றும் முன்னுரிமைப் பதிவு தொடர்பான சான்றுகளுடனும், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையுடனும் **06.01.2017**ம் தேதிக்குள் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுகி தங்கள் பெயர் மற்றும் பதிவு விவரங்களை சரிபார்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**